www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 19 JULY 2012

இதழ் - 19 ஆடி 2012

# நீதித்துறையின் சுதந்திரமும் சுயாதீனமும் பாதுகாக்கப்பட வேண்டும்!

இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் சுயாதீனம் பற்றிய சர்ச்சை ஒன்று மிகவும் தீவிரமாக வெளிக்கிளம்பியுள்ளது. இதற்கு முன்னரும் நீதித்துறை அச்சுறுத்தலுக்கு உள்ளான சம்பவங்கள் சில நடந்துள்ள போதிலும், அவற்றில் காட்டப்படாத தீவிரம் தற்போதைய பிரச்சினையில் காட்டப்படுகிறது. அதற்குக் காரணம், அதற்கான அரசியல் பின்னணியும் காரணிகளும்தான் என்பது இரகசியமான விடயமல்ல.



தற்போதைய பிரச்சினை அமைச்சர் றிசாத் பதியுதீன் சம்பந்தப்பட்டது என்றபடியால், இந்த தீவிரம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர் பதியுதீன் மன்னார் நீதிபதியை மிரட்டியதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்தே, அவருக்கு எதிரானதும், நீதித்துறை மீதான அக்கறை பற்றியதுமான பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ளன.

அமைச்சர் நீதிபதியை மிரட்டியதாக எழுந்த குற்றச்சாட்டு எழுவதற்கு முன்னர், வேறு சில விரும்பத்தகாத சம்பவங்கள் மன்னாரில் நடந்துள்ளன. முஸ்லீம் மக்களால் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகத்தை, வேறொரு பகுதியினர் பலவந்தமாகக் கைப்பற்றியதின் காரணமாக இருசாராருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. இந்தச் சர்ச்சையில் நீதிமன்றத் தலையீடும் இருந்துள்ளது. நீதிமன்ற செயற்பாட்டை ஆட்சேபித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் நீதிமன்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களில் சிலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு முன்னரே மன்னாரில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் இரு இனத்தவர்களான தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்க சில உள் நோக்கம் கொண்ட சக்திகள் முயன்று வந்துள்ளன. இவர்களில் சிலர் கடந்த காலங்களில் புலிகளுடன் தீவிரமான தொடர்புகளைக் கொண்டிருந்த மதவாத சக்திகளாவர். இவர்களுடைய இந்த தீய நோக்கத்துக்கு தமிழ் – முஸ்லீம் ஐக்கியம் பற்றிப் போலியாகப் பேசிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் சிலரும் உடந்தையாக இருந்துள்ளனர்.

புலிகள் 1995 அக்டோபர் 30ம் திகதி வட மாகாணத்திலிருந்து 2 மணித்தியால அவகாசத்தில் முஸ்லீம் மக்களை உடுத்த உடையுடன் வெளியேற்றி இனச்சுத்திகரிப்பு செய்தபோது, அதை எந்தவிதத்திலும் கண்டிக்காத இந்தச் சக்திகள், போர் முடிவுக்கு வந்து முஸ்லீம் மக்கள் திரும்பவும் வடக்கிலுள்ள

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ ஆதரவு யாருக்கு தேவை?

'ரெசோ' (TESO) என்றழைக்கப்படும் தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின் (Tamil Eelam Supporters Organisation) மகாநாடொன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பன்னிரண்டாந்திகதி சென்னை இராயப்பேட்டையில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி தலைமையில் நடைபெறவுள்ளது. இம்மகாநாட்டிற்கு இந்தியாவின் ஆளும் கூட்டணி அரசாங்கத்தின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி தவிர்ந்த ஏனைய சில இந்திய கட்சிகளின் முக்கியஸ்தர்களும், இலங்கையிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சிலரும், விக்கிரமபாகு கருணாரத்தினாவும் கலந்து கொள்கிறார்கள். இது தவிர துருக்கி, மொரொக்கோ, நைஜீரியா, சுவீடன் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் இம்மகாநாட்டிற்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுன்றது.

தமிழ்நாட்டில் தீவிர தமிழீழ ஆதரவாளர்களென கி.வீரமணி, நெடுமாறன், சீமான் போன்றவர்களே அறியப்பட்டவர்கள். 1985 ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதியை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'ரெசோ' இல் கி.வீரமணி, நெடுமாறன் ஆகியோர் முக்கிய அங்கத்தவர்களாகவும் இருந்துள்ளார்கள். ஆனால் இப்போது நடக்கவிருக்கும் இந்த மகாநாட்டிற்கு நெடுமாறனும் சீமானும் எதிர்ப்பு தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளனர். ஸ்பெக்ரம் ஊழல் வழக்கில் சிக்கியிருக்கும் தனது மகள் கனிமொழியையும் பேரர்களான மாறன் சகோதரர்களையும் காப்பாற்றும் நோக்கில், மத்திய அரசை மிரட்டவே கருணாநிதி 'ரெசோ' மகாநாடு நடாத்துகிறாரென நெடுமாறன் கூறியிருக்கிறார்.

கருணாநிதி எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்கையில் இலங்கைத் தமிழருக்காக கரிசனை காட்டுவதும், முதல்வராக இருக்கையில் சொத்துச் சேர்ப்பதும் எல்லோரும் அறிந்ததே. 2009 ஆண்டில் புலிகளின் முற்றுமுழுதான அழிப்பு நிகழ்கையில் தமிழ்நாட்டில் கருணாநிதியே முதல்வராகவும் இந்திய ஆளும் கூட்டணி அரசாங்கத்தின் பங்காளியாகவும் இருந்தார். உண்மையிலே தமிழீழம் என்பதில் கொஞ்சமேனும் 'அக்கறை'இருந்திருந்தால் புலிகளின் முற்றுமுழுதான அழிவினைத் தடுக்க அப்போது அவர் ஏதாவது செய்திருக்கலாம். ஆனால் ஆளும் கூட்டணி அரசாங்கத்தின் தலைமையிலிருந்த காங்கிரஸ் கட்சி புலிகளுக்கு எதிரான போரை ஆதரித்ததால், போரில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு எதிராக குரல் கொடுத்ததோடு தன்னை மட்டுப்படுத்திக் கொண்டார்.

1990 ஆண்டில் சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா புலிகளால் கொல்லப்பட்ட போதும், 1991 ஆண்டில் ராஜிவ்காந்தி சென்னைக்கு அருகில் வைத்து புலிகளால் கொல்லப்பட்ட போதும் தமிழ்நாட்டில் கருணாநிதியே முதல்வராக இருந்தார். அப்போது ஈழத்து இயக்கக்காரர்கள் தங்களுக்குள் மோதுவதை நிறுத்தவேண்டும் என்று கோரி ஒரு மகாநாடு நடாத்தியிருந்தால் புலிகளின் கொலை வெறியை தணிப்பதற்கு பிரயோசனமானதாக இருந்திருக்கும். இதன்மூலம் சிலவேளைகளில் ராஜிவ்காந்தி கொலையைக்கூட தடுத்திருக்கலாம்.

2011 ஆண்டில் கொழும்பில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டினை புறக்கணிக்கக்கோரி, தமிழ் நாட்டு புலி மற்றும் ஈழம் சார்பு பத்திரிகையாளர்களும் புலம்பெயர் பரிபூரண புலி ஆதரவு ஊடகங்களும் கூக்குரலிட்டன. ஆனால் இப்போது கருணாநிதி கூட்டும் இந்த மகாநாட்டைப்பற்றி இவர்கள் ஒரு மூச்சும் விடவில்லை. ஏனெனில் இவர்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசு 'பிரதான எதிரி' ஆனால் கருணாநிதி 'நட்பு சக்தி'!

தமிழ் நாட்டிற்கு வருகைதரும் சிங்கள இனத்தவரை முற்றுகையிடுதல், சென்னை மற்றும் மும்பாய் திரைப்பட ஸ்ருடியோக்களை நம்பியிருக்கும் சினிமாக்காரர்கள் இலங்கையில் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதை தடுத்தல், எதிர்ப்பு கூக்குரல்களை புறந்தள்ளிவிட்டு இலங்கை செல்லும் அறியப்பட்டவர்கள்பற்றி பத்திபத்தியாக வசைபாடுதல் போன்ற கைங்கரியங்களை செய்துவரும் தமிழினவாதிகள் மத்தியிலும் புலம்பெயர் புலிசார்பு அமைப்புகள் மத்தியிலும் 'ரெசோ' மகாநாடு வரவேற்பு பெற்றுள்ளதாகவே தெரியவருகின்றது. ஏனெனில் இவர்கள் எல்லோருமே புலிகளை பூண்டோடு அளித்த இலங்கையிலுள்ள ராஜபக்ச அரசுக்கு எந்த வகையிலாவது பாடம் புகட்ட வேண்டும் என்பதில் கங்கணங்கட்டி நிற்பவர்கள்.

இலங்கையில் நீண்டகாலமாக கொளுந்துவிட்டு எரியும் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு இலங்கையின் பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களின் ஆதரவு மிகவும் அவசியம். இந்த பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவோடு இனப்பிரச்சனைக்கான தீர்வொன்று உருவாகுவதற்கான வாய்ப்பினை, இந்த மகாநாடு நிட்சயமாக பின்தள்ளும் என்பதே உண்மை. *

வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com




படிப்பகம்

www.padippakam.com

# பத்மநாபா கொலையாளிகளை தப்பிப்போக வாய்ப்பளித்த தமிழகத்தின் கபடத்தனமான உயர் தலைமை!

## ராஜீவ் கொலை வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி தரும் அதிர்ச்சித் தகவல்கள்!!




**சு**தேந்திரராஜா என்கிற சாந்தன் என்கிற ராஜூ என்கிற சின்ன சாந்தனுக்கு சிறுவயது முதல் சிவராசனைத் தெரியும்.

1988 பிப்ரவரியில் சிவராசன் ஒருநாள் சின்ன சாந்தனைக் கூப்பிட்டு, 'உனக்கு சென்னைக்குச் சென்று படிக்க விருப்பமா? இயக்கம் அதற்கு ஏற்பாடு செய்யும். நான் பார்த்துக் கொள்வேன்' என்று சொல்லியிருக்கிறார்.

இது நடந்து சரியாக இரண்டு வருடங்கள் கழித்து, 1990ம் ஆண்டு பிப்ரவரியில் சிவராசன், சின்ன சாந்தனை அழைத்துக்கொண்டு சென்னை வந்தார். வடபழனி கங்கையம்மன் கோயில் தெருவில் வசித்து வந்த நாகராஜன் என்ற இலங்கைத் தமிழர் ஒருவர் வீட்டுக்கு அவர்கள் சென்றார்கள். நாகராஜன் தொழில்முறையில் ஒரு கடத்தல்காரர்…அவரிடம் சின்ன சாந்தன் சென்னைக்குப் படிக்க வந்திருக்கும் விசயத்தைச் சொல்ல, அன்றைய தினமே நாகராஜனும் சிவராசனும் சாந்தனை எம்.ஐ.ஈ.டிக்கு (Madras Institute of Engineering Technology) அழைத்துச் சென்று சேர்த்துவிட்டார்கள். படிக்கவும் வைத்து, வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து யார் இப்படித் தன்னைக் கவனிப்பார்கள் என்று சின்ன சாந்தனுக்கு சிவராசன் மீது மிகுந்த மதிப்பும் விசுவாசமும் உண்டாயிற்று.

பதினைந்து நாட்கள் ஒழுங்காகக் கல்லூரிக்குச் சென்று வந்து கொண்டிருந்தார். அதன்பின் ஒருநாள் வள்ளுவர் கோட்டத்தில் சிவராசனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, சிவராசன் ஈ.பி.ஈர்.எல்.எப் இயக்கத்தைப் பற்றியும் பத்மநாபாவைப் பற்றியும் சின்ன சாந்தனிடம் சிறிது நேரம் பேசினார். 'அது ஒரு சமூக விரோத இயக்கம். இந்திய அமைதிப்படையிடம் விடுதலைப் புலிகளைக் காட்டிக்கொடுப்பதே அவர்கள்தான். நீ கொஞ்சம் அவர்களைக் கவனிக்க வேண்டும்'

சின்ன சாந்தன் வியப்புடன் கவனித்துக்கொண்டிருந்தபோதே சிவராசன், 'பத்மநாபா கொல்லப்பட வேண்டியவர். இந்தப் பணியை நாம் செய்ய முடிந்தால் அது நம் மக்களுக்குச் செய்த பெரிய சேவை' என்றும் சொன்னார்.

சின்ன சாந்தனுக்கு அப்போது இருபது இருபத்தொரு வயதுதான். அந்த வயதுக்கே உரிய ஆர்வமும் பரபரப்பும் சாகசச் செயலில் ஈடுபடும் குதூகலமும் இருந்தன. சிவராசனுக்காக ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்துக்குச் சென்று பழக்கம் ஏற்படுத்திக்கொண்டு ஒற்றறிந்து சொல்வதாக உறுதியளித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகம் சென்னை கோடம்பாக்கத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. சின்ன சாந்தன் அங்கே செல்லத் தொடங்கினார். இலங்கையிலிருந்து புதிதாக வந்து இறங்கியிருக்கும் அகதி என்பது போன்ற அறிமுகத்துடன் அங்கே சென்று ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் மீது தனக்கு அக்கறையும் ஈடுபாடும் இருப்பதாகக் காட்டிக்கொண்டு, அங்கிருந்த நபர்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டார்.

இப்படி ஈ.பி.ஆர்.எல்.எப் காரர்களுடன் பழகி, அவர்கள் யார் யார் எத்தனை பேர் இருக்கிறார்கள், வந்து போகிறவர்கள் யார், அலுவலகத்தில் என்ன பேசுகிறார்கள், பத்மநாபா எங்கே இருக்கிறார், எப்போது வருவார் என்று கிடைக்கிற ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com

தகவலையும் சிவராசனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்.

1990 மார்ச்சில் பத்மநாபா ஒரிஸாவில் இருந்தார். மே மாதம் அவர் சென்னை திரும்புவதாக சின்ன சாந்தனுக்குத் தெரிந்தது. உடனே அத்தகவலை சிவராசனுக்குத் தெரியப்படுத்தினார். சிவராசன் ஆயத்தமாகத் தொடங்கினார்.

ஜூன் மாதம் 19ம் தேதி நாள் குறித்தார்கள். அன்றைக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்தில் மத்திய கமிட்டியின் முக்கிய மீட்டிங் ஒன்றும் நடைபெறவிருந்தது. பத்மநாபா, யோகசங்கரி, கிருபாகரன், கோமளராஜா, புவி, லிங்கம் என்று அமைப்பின் அனைத்து முக்கியஸ்தர்களும் கூடுவார்கள்.

இந்தத் தகவல் கிடைத்ததில் சிவராசன் சுறுசுறுப்பானார். அன்று மாலை ஆறு மணி அளவில் கோடம்பாக்கம் மேம்பாலத்தில் சின்ன சாந்தனைக் காத்திருக்கச் சொன்னார். ஒரு அம்பாசிடர் காரில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவைச் சேர்ந்த டேவிட் மற்றும் சிலரும் சிவராசனுடன் அப்போது வந்தார்கள். சின்ன சாந்தனை கோடம்பாக்கம் மேம்பாலத்தில் ஏற்றிக்கொண்டு நேரே ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்துக்குச் சென்றார்கள்.

சற்றுத்தள்ளி காரை நிறுத்திவிட்டு சின்ன சாந்தனை மட்டும் இறக்கி, அலுவலகத்தில் பத்மநாபா இருக்கிறாரா என்று பார்த்துவரச் சொன்னார்கள். சென்று பாரத்துவிட்டுத் திரும்பிய சின்ன சாந்தன், 'பத்மநாபா அலுவலகத்தில் இல்லை. அருகிலேயே ஒரு அபார்ட்மெண்டும் ஈ.பி.ஆர்.எல்.எப்புக்குச் சொந்தமானது இருக்கிறது. அங்கே தங்கியிருக்கிறார்' என்று தகவல் சொல்ல, சிவராசன், டேவிட் மற்றும் உடன் வந்த சிலரும் நேரே அபார்ட்மெண்டுக்குச் சென்றார்கள். அனைவரிடமும் ஏகே 47 இருந்தது. ஒரு வெடிகுண்டும் கொண்டு போனார்கள்.

வெளியே காவலுக்கு நின்ற சின்ன சாந்தனுக்குச் சிறிது நேரத்தில் உள்ளே துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. மணி சரியாக இரவு ஏழு. பரபரவென்று உள்ளே போன அனைவரும் திரும்பி வந்து காரில் ஏறிக்கொண்டார்கள்.
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நாங்கள் தேடிப்பிடித்த சின்ன சாந்தன் என்னும் சுதேந்திர ராஜா அளித்த மேற்படி வாக்குமூலத்தின் மூலம்தான் பத்மநாபா கொலையில் ஈடுபட்ட ரகுவரன், டேவிட் என்கிற பெயர்களுக்குரிய நபர்கள் யார் என்னும் விடயமே தெரிய வந்தது.

சென்னையில் பத்மநாபாவைக் கொன்றுவிட்டு அம்பாசிடர் காரில் தப்பித்தவர்கள் நேரே தஞ்சாவூர் சென்று அங்கிருந்து கோடியாக்கரைக்குச் சென்று இலங்கைக்குக் தப்பிப்பதுதான் திட்டம். அவர்கள் செங்கல்பட்டு தாண்டும்போதே இரண்டு போலிஸ்காரார்கள் வழி மறித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் சந்தேகமெல்லாம் ஒன்றுமில்லை. வழக்கமான நெடுஞ்சாலைப் பரிசோதனைதான்.

காரை ஓரமாக நிறுத்திவிட்டு எதற்கோ இறங்கியிருந்தவர்களை நெருங்கிய அந்த இரண்டு போலிசாரும் வண்டியில் என்ன இருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள்.

வண்டியில் நிறையவே ஆயுதங்கள் இருந்தன. ஏகே ரகத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் இன்னும் பல.

'டிக்கியைத் திறந்து காட்டுங்கள்!'

'டிக்கிதானே? ஓ திறக்கிறேனே!' என்று சொல்லிவிட்டு சிவராசன் மற்றவர்களைக் காரில் ஏறச்சொல்லி கண் ஜாடை காட்டினார். அனைவரும் காரில் ஏறிக்கொள்ள, சிவராசன் டிக்கியைத் திறக்கச் செல்பவர் மாதிரி பின்புறமாகச் சென்று, ஒரு கணம் தாமதித்து, சடாரென்று காரைச் சுற்றி வந்து டிரைவர் சீட்டில் பாய்ந்து ஏறி வண்டியை ஸ்டார்ட் செய்தார்.

இரண்டு காவலர்களில் ஒருவர் வயதானவர். இன்னொருவர் இளைஞர். கேட்டது இளைஞர்தான். வயதான காவலருக்கு அவர்களைப் பார்த்ததும் 'பிரயோஜனமில்லாதவர்கள்' என்று தோன்றிவிட்டிருக்கிறது. இளைஞருக்கு ஒரு முயற்சி செய்து பார்க்கும் ஆசை. அதனால்தான் அவர் டிக்கியைத் திறந்து காட்டச் சொல்லியிருக்கிறார்.

அந்த இளம் காவலர் விடாமல் வண்டியைத் துரத்தப் பார்க்க, அவர் கையை இழுத்துப் பிடித்தபடியே வண்டியை ஓட்டிக்கொண்டு சிறிது தூரம் ஓடி, ஓரிடத்தில் கையை விட்டார் சிவராசன். அடி. பலத்த அடி.

அதன் பிறகு சிவராசனுக்குக் கவலை வந்துவிட்டது. ஒரே வண்டியில் மொத்தமாக அனைவரும் செல்வது ஆபத்து. இன்னொரு வண்டி வேண்டும். அவசரம்.

விழுப்புரம் அருகே அவர்களுக்கு அந்த இன்னொரு வண்டி கிடைத்தது. யாரோ மூன்று பேர் வெள்ளை வானில் சென்று கொண்டிருந்தார்கள். சிவராசன் அந்த வண்டியை வலுக்கட்டாயமாக நிறுத்தி, அவர்களைத் துப்பாக்கி முனையில் இறக்கிவிட்டு, அந்த வண்டியையும் எடுத்துக்கொண்டார்.

இரண்டு வண்டிகளில் அவர்கள் பிரிந்து ஏறி திருச்சிக்குச் சென்றார்கள். அங்கிருந்து மல்லிப்பட்டணம் சென்று ஒரு தோப்பில் தங்கியிருந்து மறுநாள் மாலை படகேறி வல்வெட்டித்துறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே பொட்டு அம்மான் அவர்களை வரவேற்று, கட்டித்தழுவிப் பாராட்டினார்.

இது சின்ன சாந்தன் விவரித்த தகவல்.



படிப்பகம்

www.padippakam.com

இங்கே வேனைப் பறிகொடுத்த நபர் சென்னை கமிசனர் அலுவலகத்துக்குத் தொடர்புகொண்டு புகார் அளித்திருக்கிறார். ஆயுதங்களுடன் வேனைக் கடத்திக்கொண்டு போகிறார்கள். திருச்சிக்குத் தான் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் துல்லியமாகத் தகவல் சொல்லியும் சிவராசன் குழுவினரை திருச்சி அடைவதற்கு முன்னாலோ, திருச்சியிலோ மடக்கிப் பிடிக்கவும் கைதுசெய்யவும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவே இல்லை.

அவர்கள் திருச்சிக்குச் சென்று, அங்கிருந்து மல்லிப்பட்டணம் போய், இரவு வரை காத்திருந்து படகு வந்து ஏறிச் செல்லும்வரை ஒரு நடவடிக்கையும் கிடையாது.

போகிறவர்களைப் பிடிக்க வேண்டாம் என்று மேலிடத்து வாய் வழி உத்தரவுகள் இருந்ததாகப் பின்னால் சொல்லப்பட்டது.

இந்த வழக்கை யாரும் கேட்டுக் கொள்ளாமலேயே சி.பி.ஐ. எடுத்துக்கொண்டிருக்கலாம். அதற்கான அதிகாரங்கள் எங்களுக்கு உண்டு. தவிரவும் ராஜீவ் படுகொலை வழக்குடன் நெருங்கிய தொடர்புடைய வழக்கு அது. ஆனால் மாநில பொலிஸ் மெத்தனம் காட்டுவதைக் கண்டு அ.தி.மு.க தலைவர் ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்தபோது, இதனை சி.பி.ஐக்கு மாற்றச் சொல்லி சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு, மத்திய அரசுக்குக் கடிதமே எழுதிய பிறகும், ஏனோ ராஜீவ் கொலை வழக்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவரான கார்த்திகேயன் அதில் அப்போது ஆர்வம் செலுத்தவில்லை. வழக்கை இறுதிவரை கையில் எடுக்கவும் இல்லை. தமிழ்நாடு போலிசே விசாரிக்கட்டும் என்று சொல்லிவிட்டார்.

இதற்கான காரணம் எனக்குப் புரியவே இல்லை.

(மேலே தரப்பட்டுள்ள பத்திகள், ராஜீவ் கொலை வழக்கை விசாரணை செய்த சிறப்புப் புலனாய்வுக்குழுவின் தலைமைப் புலனாய்வு அதிகாரி – சி.பி.ஐ. (ஓய்வு) கே.ரகோத்தமன் எழுதி வெளியிட்ட 'ராஜீவ் கொலை வழக்கு' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட பகுதிகளாகும். பத்மநாபாவும் அவரது உயர்மட்ட தோழர்களும் புலிகளால் சென்னையில் வைத்துக் கொல்லப்பட்ட போது, தமிழகத்தின் முதலமைச்சராக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் தமிழகத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளின் மனித வெடிகுண்டால் மிலேச்சத்தனமான முறையில் கொல்லப்பட்ட போதும், கருணாநிதியே தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுப் குழுவின் தலைவராக புலிகளின் போசகரான எம்.ஜீஆரின் விசுவாசியான கார்த்திகேயனே இருந்தார் என்பதும் கவனத்துக்குரியது.

இந்த விடயங்கள் பத்மநாபா மற்றும் ராஜீவ் கொலையாளிகளான புலிகளுக்கு, தமிழகத்தில் யார் யார் பின்னணியில் இருந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையான ஊகங்களைத் தொடர்ந்து கிளப்பிய வண்ணம் உள்ளது) *

'நேர்மையான மனிதர் என்பதற்கு உங்களுக்கு ஒரு உதாரணம் தேவைப்பட்டால், நெல்சன் மண்டேலாவை எடுத்துக்கொள்ளலாம். எதற்கும் விட்டுக்கொடுக்காத, துணிச்சலான, அமைதியான, புத்திசாலியான, செயல்வேகம் கொண்ட ஒரு நாயகன் உங்களுக்குத் தேவைப்படுகிறாரா? இதோ மண்டேலா இருக்கிறார். அவரை நேரில் சந்தித்த பிறகு இந்த முடிவுக்கு நான் வந்து சேரவில்லை. பல ஆண்டுகளாக நான் இதுகுறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இந்த சகாப்தத்தின் அசாத்தியமான ஓர் அடையாளமாக நான் அவரைக் காண்கிறேன்.'

– பிடல் காஸ்ட்ரோ

"ஒரு மனிதன் வேறு எந்தத் தகுதியும் அற்றவனாயிருந்தும், கேவலம் தனது முதலின் பலத்தினால் பொருள்களை உற்பத்தி செய்யும் விலையுயர்ந்த சாதனங்களைப் பெற்று, அதன் மூலம் ஏராளமான மக்களுடைய உழைப்பின் பெரும் பகுதியைத் தனது சொந்த இலாபத்திற்காகவும், தனக்கு உதவி செய்யும் முதலைப் பெருக்குதவற்காகவும் உபயோகித்துப் பணம் சம்பாதிப்பதற்குச் சிறந்த வழி முதலாளியக் கொள்கை"

– ராகுல சாங்கிருத்தியாயன்


## இப்பொழுது விற்பனையாகின்றது!

இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளரான
**நீர்வை பொன்னையனின்**
# 'நினைவலைகள்'

(நீர்வையின் ஏழு தசாப்த காலத்துக்கும் மேலான வாழ்க்கை அனுபவங்கள்)
பக்கங்கள் – 350
விலை – 400 ரூபா
பிரதிகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

Sri Lanka Progressive Art & Literature Association
18-6/1, Collingwood Place
Colombo – 6
Sri Lanka
E-Mail: Kailashpath@yahoo.com




படிப்பகம்

www.padippakam.com

# புலம்பெயர் தமிழ் மக்களே! வாழவைக்கும் மண்ணை மதித்து நடவுங்கள்!!

ஒவ்வொரு வருடமும் ஜூலை முதலாம் திகதியை கனடியர்கள் 'கனடா தின'மாக (கனடாவின் தேசிய தினம்) பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுவது வழமை. இந்த உன்னதமான தினத்தை கனடாவின் பெரும்பான்மை வெள்ளை இன மக்கள் மட்டுமின்றி, வந்தேறு குடிகளான 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களும் உவகையுடன் கொண்டாடுவர்.

கனடாவில் குடியேறியுள்ள பிற நாட்டு மக்களின் தொகை வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் இலங்கைத் தமிழர்களும் (ஏறத்தாழ மூன்று இலட்சம்) அடங்குகிறார்கள். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இலங்கைக்கு வெளியே அவர்கள் கூடுதலான தொகையில் வாழும் நாடு கனடாதான். அவர்களைப் பொறுத்தவரையில் கனடா அவர்களது இரண்டாவது தாயகம் என்றுகூடப் பெருமையாகச் சொல்லிக்கொள்வர். இலங்கையில் அவர்கள் யுத்தம் காரணமாக அனுபவித்த பயம் சூழ்ந்த வாழ்க்கையை கனடாவில் மருந்துக்கும் அனுபவிக்கவில்லை. அதுமாத்திரமின்றி அவர்களில் பலர் தம் வாழ்நாளில் அனுபவித்திராதது மட்டுமின்றி, கண்டும் கேட்டுமிராத பொருளாதாரச் செழிப்புமிக்க வாழ்க்கையையும் அனுபவிக்கின்றனர். அவர்களது தேட்டத்தில் இலங்கையில் இருக்கும் உறவுகளும் வாழுகின்றனர்.

இத்தகைய ஒரு வாழ்க்கையைத் தந்ததிற்காக கனடிய நாட்டுக்கு இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் நன்றி செலுத்த வேண்டும். ஆனால் மாறாக நமது சமூகம் என்ன செய்கிறது?

கனடியத் தமிழர்கள் சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் முக்கியமான மூன்று துறையினர். முதலாவது இங்குள்ள வர்த்தக நிறுவனங்கள். இரண்டாவது புற்றீசல் போல் இலங்கையிலுள்ள கோவில்களுக்கு பிரதிகளாக இங்கு தோன்றியுள்ள கோவில்கள். மூன்றாவது இருபதுக்கு மேற்பட்ட பத்திரிகைகளையும் உள்ளடக்கிய அச்சு, ஒலி, ஒளி ஊடகங்கள். இந்த மூன்று துறையினரையும் பொறுத்தவரையில் எத்தனை ஊடகங்களில் கனடா தினத்தையொட்டி சிறப்புக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன அல்லது நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன? ஏத்தனை கோவில்களில் கனடா தினத்தையொட்டி பூசை வழிபாடுகள் நடந்துள்ளன?

இது ஒருபுறமிருக்க, கனடா தினத்தன்று தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபோது அதிர்ச்சிதான் கிடைத்தது. இவ்வருடம் கனடா தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்ததால், அடுத்த நாள் ஜூலை 2ம் திகதி திங்கட்கிழமையை கனடிய அரசாங்கம் பொது விடுமுறை தினமாக அறிவித்தது. அன்றைய தினம் கனடாவிலுள்ள அரசாங்க, தனியார் காரியாலயங்கள் நிறுவனங்கள் மட்டுமின்றி, வர்த்தக நிறுவனங்களும் (உணவு விடுதிகள் நீங்கலாக) திறக்கப்படவில்லை. ஆனால் இங்குள்ள தமிழ் வர்த்தக நிறுவனங்கள் மட்டும் அதற்கு எதிர்மாறாக நடந்து கொண்டன.

தமிழர்கள் நடாத்தும் உணவு விடுதிகள் மட்டுமின்றி, பெரும்பாலான பலசரக்குக் கடைகள், புடவைக் கடைகள், நகைக்கடைகள், அழகு சாதனக் கடைகள், வீடியோ கடைகள், எலக்ரோனிக் கடைகள், ஸ்ரூடியோக்கள், அச்சகங்கள, சலூன்கள் என அத்தனையையும் திறந்து வைத்து வியாபாரம் செய்தனர். இது திட்டமிட்டு கனடாவின் தேசிய தினத்தை அவமதிப்பதற்காக செய்த செயல் என்று நான் சொல்ல வரவில்லை. மற்ற நாட்டவர்கள் தமது வர்த்தக நிறுவனங்களைத் திறக்காத போது தாம் மட்டும் திறந்து வியாபாரம் செய்து நாலு பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற 'தவிச்ச முயல் அடிக்கும்' மனோபாவமே இதற்குக் காரணம்.




அதேநேரத்தில் புலிகள் கோலோச்சிய காலத்தில் எப்படி இலங்கையில் அவர்களது ஆதிக்கப் பகுதிகளில் தமது மாவீரர் தினம், திலீபன் நினைவு தினம், கரும் புலிகள் தினம், அன்னை பூபதி தினம் போன்ற முக்கிய தினங்களில் மருந்து வாங்க முடியாமல், தேநீர் குடிக்க முடியாமல் மருந்துக் கடைகளையும், தேநிர்க்கடைகளையும் கூட பலவந்தமாகப் பூட்ட வைப்பார்களோ, அதேபோல கனடாவிலும் கடந்த காலங்களில் தமிழர்களின் வர்த்தக நிலையங்களைப் பூட்ட வைத்து வந்துள்ளனர். அவ்வாறு பூட்ட மறுப்பவர்களின் கடைகளை இலங்கையில் மட்டுமின்றிக் கனடாவிலும் தாக்கிச் சேதப்படுத்தியும் உள்ளனர்.

புலிகளுக்குப் பயந்து 'இனப்பற்றை'யும் 'தமிழ் பற்றை'யும் வெளிப்படுத்திய கனடிய தமிழ் வர்த்தகர்கள் தங்களையும், தங்கள் சந்ததியினரையும் வாழ வைக்கும் புனித பூமியான கனடாவின் தேசிய தினத்தன்றாவது தமது கடைகளைப் பூட்டி கனடிய மண்ணுக்கு மதிப்பளித்தால் என்ன? பிறந்த பொன் நாடான இலங்கையைத்தான் மதிக்கிறீர்கள் இல்லை. புகுந்த பொன் விளையும் பூமியான கனடாவையாவது மதியுங்கள். குறைந்த பட்சம் அடுத்த வருடம் கனடா தினத்திலாவது உங்கள் கனடிய விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள். இதை நடைமுறைப்படுத்துவதற்கு கனடாவில் முன்னணியில் நிற்கும் அதிபர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், சமூக சேவகர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் முன்வந்து உழைக்க வேண்டும்.

கனடாவில் நான் குடியேறிய ஏழு வருடங்களில் அவதானித்ததை மனம் பொறுக்காமல் இங்கு குறித்துள்ளேன். நான் கேள்விப்பட்ட வரையில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் இதே நிலைதான் என அறிகிறேன். எனவே எனதருமை தமிழ் மக்களே! உங்களை வாழ வைக்கும் நாடுகளை இனிமேலாவது மதித்து நடவுங்கள்.

**சி.தம்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**
**ஸ்காபரோ (கனடா)**

*



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும் இலங்கை – இந்திய உறவுகளும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் அதிகரித்து வருவதான ஒரு கருத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள சில ஊடகங்கள் பரப்பி வருகின்றன. குறிப்பாக புலம்பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் உள்ள புலிகளுக்குச் சார்பான ஊடகங்களே அக்கருத்தை முன்னின்று பிரச்சாரம் செய்கின்றன. இந்தப் பிரச்சாரம் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருகின்ற போதிலும், கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டுவந்த இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்த பின்னர் தீவிரமடைந்துள்ளது.

இந்தவிதமான கருத்தை முன்வைப்பவர்கள் தமக்குள்தாமே சுயமுரண்பாடு கொண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. அதாவது, இவர்கள் இலங்கையில் பணிபுரிய வந்த இந்திய அமைதிப்படையுடன் விடுதலைப் புலிகள் போர் புரியத்தொடங்கிய பின்னர், தீவிரமான இந்திய விரோத நிலைப்பாடொன்றை முதலில் எடுத்தார்கள். இந்தியா ஈழத்தமிழர்களின் முதுகில் குத்தித் துரோகமிழைத்துவிட்டதாக அப்பொழுது குற்றஞ்சாட்டினார்கள். பின்னர் இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பிய அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் மனித வெடிகுண்டின் மூலம் படுகொலை செய்த போது அதை நியாயப்படுத்தியும் வந்தார்கள்.

**சேவற்கொடியோன்**

ராஜீவ் படுகொலையின் பின்னர் புலிகளை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட போர்களின் போது, இந்தியா சகல வழிகளிலும் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கி வந்தது. அந்தக் காலகட்டத்தில் இந்த புலி ஆதரவு சக்திகளின் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு மேலும் தீவிரமடைந்தது. அந்த தீவிர எதிர்நிலைப்பாடு 2009ல் இறுதியுத்தம் நிகழ்ந்த நேரத்தில் மேலும் உக்கிரமடைந்தது. புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் மட்டுமின்றி, அதுவரை புலிகளின் எதேச்சாதிகாரச் செயல்களை எதிர்ப்பது போலப் பாசாங்கு செய்துவந்தவர்கள்கூட, தமது புலி ஆதரவு நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்திக் கொண்டனர்

உதாரணமாக, கனடாவில் புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டு, அதன்காரணமாக அதன் காரியாலயத்தை புலிகள் எரிக்கும் அளவுக்குச் சென்ற 'தேடகம்' என்ற அமைப்பினைப் பின்னர் தொடர்ந்து நடாத்திவரும் அதன் மிச்சசொச்சங்கள் சிலர், இறுதியுத்த நேரத்தில் கனடாவின் ரொறன்ரோ நகரிலுள்ள இந்திய துணைத் தூதராலயத்தின் முன்னால் ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்டத்தின் போது அச்சடித்து விநியோகித்த சுலோக அட்டைகளில், யுத்தத்தை இருதரப்பும் நிறுத்தி அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கும்படி மட்டும் கோரவில்லை. இந்தியா புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் எனவும் ஒரு கோரிக்கையை முன்வைத்துத் தமது புலி விசுவாசத்தைப் பகிரங்கப்படுத்திக் கொண்டார்கள். இப்படிப் பலப்பலர்.




இறுதியுத்தத்தில் புலிகள் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டு, அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உட்பட முழுத்தலைமையும் அழிக்கப்பட்டு அல்லது சரணடைய வைக்கப்பட்ட பின்னர், இந்த புலி ஆதரவு சக்திகளின் இந்திய எதிர்ப்பு கண்மூடித்தனமான அளவுக்கு மாறியது. இனிமேல் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை என்ன காரணம் கொண்டும் நம்பக்கூடாது என்ற அளவுக்கு அவர்களின் நிலை சென்றது.

இருந்தாலும் இடையடையே இலங்கை அரசைவிட, இலங்கைத் தமிழர்களே இந்தியாவின் உண்மையான நண்பர்களாகவும், அதன் புவிசார் அரசியலுக்கு ஆதரவானவர்களாகவும் இருக்கக்கூடியவர்கள் என்ற கருத்தை 'தமிழ் நெற்' போன்ற புலிகளுக்குச்



படிப்பகம்

www.padippakam.com

சார்பான ஊடகங்கள் செய்தும் வந்தன. அத்துடன் இலங்கை அரசு சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் நெருங்கிச் செல்கிறது என்றும் 'கோள் மூட்டும்' பிரச்சாரங்களையும் மேற்கொண்டனர். புலி ஆதரவாளர்களின் இந்தக் கருத்தில் இந்தியாவுக்கும் ஓரளவு உடன்பாடு இருந்தபோதிலும், அதற்காகப் புலிகளை அரவணைத்து திரும்பவும் மடியில் நெருப்பைக் கட்டிக்கொள்ள இந்தியா விரும்பவில்லை.

அதுதவிர, புலிகள் மேற்கத்தைய சார்பானவர்கள் என்ற ஒரு கருத்தும் இந்திராகாந்தி காலத்திலிருந்தே இந்தியாவின் பிரதான ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சியிலும், பொதுவாக இந்தியாவிலும் இருந்து வந்துள்ளது. புலிகள் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததுகூட மேற்கத்தைய சக்திகளின் தூண்டுதலால்தான் என்ற அபிப்பிராயமும் சில தரப்புகளிடையே இன்றும் தொடர்ந்தும் நிலவி வருகின்றது. புலிகள் பற்றி இந்தவிதமான அபிப்பிராயங்கள் உருவாவதிற்கு அவர்களுடைய நடவடிக்கைகளே பிரதான காரணமாகும்.

இறுதியுத்த காலத்துக்கு முன்னரும் சரி, அது நடைபெற்ற காலத்திலும் சரி, அதன் பின்னரான காலத்திலும் சரி, புலிகள் மேற்கத்தைய சக்திகள் இலங்கையில் தலையிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு விமோசனம் பெற்றுத்தரும்படியே வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர். இன்றும்கூட அவர்கள் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி புலம்பெயர் நாடுகளில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்யும்போது, அந்தந்த நாடுகளில் உள்ள அமெரிக்க அல்லது பிரித்தானியத் தூதரகங்களின் முன்னால் செய்வதும், அந்த நாடுகள் இலங்கையில் தலையிடும்படி கோருவதும் ஒரு வழமையாக இருந்து வருகிறது.

இந்த நாடுகளில் ஒன்றான பிரித்தானியா, இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் உலகின் முதல்தரமான ஏகாதிபத்தியமாக இருந்து, இலங்கை உட்பட பல நாடுகளைத் தனது பிடியில் வைத்திருந்த ஒரு காலனியாதிக்க நாடாகும். மற்றைய நாடான அமெரிக்கா, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிரித்தானியாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகின் முதல்தர ஏகாதிபத்தியமாக முன்னணிக்கு வந்த நாடாகும். இந்த இரு நாடுகளினதும் ஆதிக்கத்திலிருந்து விடுபட கடந்த நூற்றாண்டில் பல மூன்றாம் உலக நாடுகளில் எண்ணற்ற விடுதலைப் போராட்டங்கள் நடந்ததை உலக மக்கள் அறிவர்.

அத்தகைய ஒரு சூழ்நிலையில், சின்னஞ்சிறிய ஒரு நாடான இலங்கைத் தீவின் பெரும்பான்மையான சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசுக்கு – அதாவது சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு – எதிராகப் போராடுவதாகப் பிரகடனம் செய்யும் புலி ஆதரவு தமிழ் தேசியவாதச் சக்திகள், உலகளாவிய மிகப்பெரிய ஏகாதிபத்திய சக்திகளிடம் தமக்கு ஆதரவு வழங்கக் கோருவது, மிகவும் முரண்நகையான விடயம்.

இந்தக் காரணங்களால், பொதுவாக இந்தியா அன்றும் இன்றும் புலிகள் பற்றி எச்சரிக்கையாகவே இருந்த வருகிறது. வரும். ஆகையால் இந்தியா இப்பொழுது இலங்கைக்கு எதிராக எடுத்துள்ள 'கடும்போக்கு' புலிகள் அறுவடை செய்வதற்கான இந்தியாவின் விதைப்புகளல்ல. அது வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இது ஒருபுறமிருக்க, இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை இன்னும் சிலர் வேறு வகையாக வியாக்கியானப்படுத்தி திருப்திப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அதாவது, புலிகளுடனான இறுதிக்கட்டப் போருக்கு முன்னர் இலங்கை அரசு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக சில வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்கியிருந்ததாகவும், அது பற்றி இலங்கையிடம் இந்தியா பல தடவைகள் வலியுறுத்திக் கூறியபோதிலும், இலங்கை திரும்பத் திரும்ப சாக்குப் போக்குகளைச் சொல்லிக் காலம் கடத்தி வந்ததின் காரணமாகவே, இந்தியா இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் ஜெனிவா தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்ததுடன், இலங்கையுடன் சற்று இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருப்பதாகவும் இந்த இன்னொரு வகையான பிரிவினர் கூறுகின்றனர்.

இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கின்றது. காரணம் தமிழர்களின் பாதுகாவலர்கள் எனத் தமிழக மக்களில் பெருவாரியானோரால் கருதப்பட்ட புலிகளை இலங்கை அரசு முற்றாகத் துடைத்தழிப்பதற்கு இந்திய அரசு உதவியதின் பிராயச்சித்தமாக, இலங்கை அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என இந்தியா விரும்புவது இயற்கையே. குறைந்த பட்சம் 1987ல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரமாவது, இலங்கை அங்குள்ள தமிழர்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

ஆனால் 13வது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்போவதாகச் சொல்லிவந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தான் அவ்வாறு குறிப்பிட்டது, பாராளுமன்றத்தைத் தவிர முன்னர் சுதந்திரம் பெற்ற நாள் முதல் நடைமுறையில் இருந்து வந்து பின்னர் 1970களில் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசால் இல்லாதொழிக்கப்பட்ட மூதவையைத்தான் (செனட் சபை) என விளக்கமளித்துள்ளார்! அத்துடன் இந்திய –



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்போவதாகச் சொல்லி வந்த அவர், ஊடகமொன்றுக்கான நேர்காணலில், இந்திய – இலங்கை உடன்படிக்கை அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு மீது இந்தியாவால் திணிக்கப்பட்ட ஒன்று எனக் கருத்து வெளியிட்டுள்ளார்!!

அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் ஒன்றான கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை முறைமையை செயற்பட அனுமதித்த அவரது அரசு, தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மாகாணத்தின் தேர்தலை நடாத்தாது பின்போட்டுமுள்ளது. இவையனைத்தும் இலங்கை மீது இந்தியா மட்டுமின்றி, இலங்கைத் தமிழர்களும் அவநம்பிக்கை கொள்ளக் காரணமாக அமைந்துள்ளன என்பது உண்மையே.

அத்துடன் இந்த விடயத்தில், இந்தியாவில் தற்பொழுது மத்தியில் ஆட்சி நடாத்தும் காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பங்காளிக் கட்சியான தி.மு.கவின் நெருக்குதல் உட்பட, தற்போது தமிழகத்தில் ஆட்சி செய்யும் அ.இ.அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்துத் தமிழகக் கட்சிகளும் மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றன. விரைவில் பொதுத்தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் காங்கிரஸ் கட்சி, வட மாநிலங்களில் அண்மைய தேர்தல்களில் சரிவைக் கண்டுள்ள சூழலில் தென் மாநிலங்களையே, அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டையே நம்பியிருப்பதால், இலங்கை அரசை நிர்ப்பந்தித்து அங்குள்ள தமிழர்களுக்கு எதையாவது வழங்க வைத்து தமிழக அரசியல் கட்சிகளைத் திருப்திப்படுத்தும் இக்கட்டான சூழலில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலைகள் இந்திய அரசு அண்மைக்காலமாக இலங்கை மீது சற்றுக் கடும்போக்கை மேற்கொள்ள சில காரணங்களாக அமைந்துள்ள போதிலும், அடிப்படையான காரணம் அதுவல்ல என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**மிகுதி அடுத்த இதழில்....**

# இனக் குரோதத்தைத் தூண்டி இரத்தம் தோய்ந்த வரலாற்றை மீண்டும் இந்த மண்ணில் மேடையேற்ற முயற்சிக்கப்படுகிறது!

**யாழ்நீதிமன்ற நீதவான் எச்சரிக்கை!!**

**வ**டக்கில் தமிழ் மக்களின் நிலங்களை இராணுவத்தினர் அபகரிக்கிறார்கள் எனச்சொல்லி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்தேசிய முன்னணி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றது. அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவளித்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் அண்மையில் அவ்வாறானதொரு ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகப் பொலிசார் நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றிருந்தனர். இந்தத் தடையுத்தரவை நீக்கக்கோரி த.தே.முன்னணி தாக்கல் செய்திருந்த வழக்கை விசாரித்த யாழ்ப்பாணம் நீதவான் மன்று நீதிபதி மா.கணேசராசா தீர்ப்பு வழங்கும்போதே இவ்வாறு கூறினார்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், சுயாதீனமான கருத்துக்களையும் கொண்ட இத்தீர்ப்பு, தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மக்களின் பெயரால் புலிகளின் மிச்சசொச்சங்கள் மீண்டும் அரங்கேற்றத் துடிக்கும் அராஜக நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. அவர் வழங்கிய தீர்ப்பின் முக்கியமான பகுதிகள் வருமாறு:

“இந்த வழக்கிலுள்ள பிரச்சினையை ஆரோக்கியமான, புத்திசாலித்தனமான, சட்ட நடவடிக்கைகள் மூலம் அணுகியிருக்க முடியும். ஆவணங்களின் மூலம் உரிய நீதிமன்றம் முன்சென்று தமது உரிமையை நிலைநாட்டியிருக்க முடியும். பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதுதவிர தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும், இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலும் ஆர்ப்பாட்டத்தை நடாத்த முயன்றுள்ளனர். அத்துடன் நீதிமன்றக் கட்டளையைக் கிழித்தெறிந்து, “நீதிமன்றக் கட்டளையை மதிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்” என்று கோசமிடப்பட்டதாகவும் மன்று அறிகிறது.

இதன்மூலம் சட்டத்தைக் கையிலெடுக்கும் வகையிலும், அதனுடாக மக்களைத் தவறாக வழி நடத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குச் சாட்சியாக எதிர்மனுதாரர்களுக்காக வாதாடும் ஒரு சில சட்டத்தரணிகளும் இருந்துள்ளார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் நீதித்துறைக்கு சவால் விடும் வகையிலும், மிரட்டல் விடுக்கும் வகையிலும் அமையும் என்று மன்று கருதுகின்றது. சட்டத்துறையில் உள்ள இவர்கள் இதனைக் கண்டிக்க முனையாததின் மூலம் அவர்களின் கடப்பாட்டிலிருந்து விலகியிருப்பதுடன், இத்தகைய செயலுக்கு உரமூட்டியதாகவே மன்று கருதுகின்றது.

மக்களின் அவலங்களின் மீது அரசியல் நடாத்தி, மீண்டும் இருண்ட யுகத்துக்குள் மக்களை இட்டுச் செல்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...



படிப்பகம்

www.padippakam.com

# குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கும் கிரேக்கம்!

ஒரு காலத்தில் உலகின் நாகரீக வளர்ச்சியில், (கி.மு 3200) முதன்மை வகித்தும், Plato (கி.மு 427-கி.மு347) Aristoteles (கி.மு 384-கி.மு322) Socrates (கி.மு 470-கி.மு399) போன்ற தத்துவஞானிகளையும், Archimedes (கி.மு287-கி.மு212) போன்ற விஞ்ஞானிகளையும் உலகிற்குக் கொடுத்த கிரேக்கம், இன்று குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கிறது. iliad, odyssey, போன்ற காப்பியங்களை அருளிய கிரேக்கம்தான் இன்று மூச்சுத்திணறுகிறது.

மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது ஐரோப்பிய வட்டகைக்குள் வலம் வருவதா?, அல்லது விலகுவதா? என்று யோசிக்கிறது. இதிலிருந்து விலகி தானுண்டு தன்பாடுண்டென 1832 இல் புழக்கத்திற்கு வந்த Drachme நாணயத்திற்குத் திரும்புவதா?, அல்லது 2002 இல் தனது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட Euro நாணயத்தையே புழங்குவதா என்று யோசிக்கிறது.

ஐரோப்பிய வட்டகைக்குள் ஏற்பட்ட கடன் நெருக்கடிகளால், 2010 இலிருந்து கிரேக்கத்தின் பொருளாதாரம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. 2011இல் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product ) 6.9% ஆல் சுருக்கம் கண்டது. கிரேக்கத்தின் இன்றைய கடன்சுமையோ 335 பில்லியன் Euro என மலைபோல் குவிந்து கிடக்கிறது.

கிரேக்கத்தின் பொருளாதாரத்தில், கடல்வாணிபம் (Shipping industry) ஆதிகாலந்தொட்டு முக்கிய பங்கு வகித்து வருகிறது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% பங்களிப்பையும், 160000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கிறது. கிரேக்கத்தின் சுற்றுலாத்துறை 18.2% பங்களிப்பைச் செலுத்துகிறது. வருடா வருடம் 16 மில்லியனிற்கு அதிகமான உல்லாசப்பயணிகள் கிரேக்கத்திற்குச் சென்று வருகிறார்கள். இது 2008இல் 84000 தொழிலாளர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலைவாய்ப்பைக் கொடுத்தது. 2011இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 303065 மில்லியன் டொலர்கள். பளிங்குக்கல் உற்பத்தியிலும் இத்தாலி, ஸ்பானியாவுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இது தவிர கிரேக்கத்தின் பொருளாதாரத்துறைகளுக்குள் உணவுப்பொருட்கள், புகையிலை, ஆடையுற்பத்தி, இரசாயனப்பொருட்கள், உலோகப்பொருட்கள், சுரங்கத்தொழில், எண்ணெய் உற்பத்தி என்பனவும் அடங்குகின்றன.

நிலுவையாகவுள்ள 40% ஆன வரிப்பணம் இலஞ்சமாகக் கலந்துள்ளதாகவும், வரிச்சேகரிப்பில் அளவுக்கதிகமான ஊழல் நிலவுவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. கிரேக்கத்தின் வேலையின்மை 21% ஆகவும், 25 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களின் வேலையின்மை 38..5% ஆகவும் காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் நிபந்தனைகளுக்கும், சமூக நலத்திட்டங்களுக்குமிடையில் கிரேக்கம் திண்டாடுகிறது. சர்வதேச நாணய நிதியமானது, அமெரிக்க டொலர் ஒழுங்குடமையைப் பேணுவதற்காக 1945 இல் உருவாக்கப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தில் 18% அமெரிக்காவின் கைகளில். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் இதில் கூடுதல் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதன் தலைவர் எப்போதும் ஒரு ஐரோப்பியராகவும், உலகவங்கியின் தலைவர் எப்போதும் ஒரு அமெரிக்கராகவும் இருக்க வேண்டுமென்பதில் மேற்குலகம் குறியாகவுள்ளது.



வளர்ச்சியடைந்த நாடுகள், வளரும் நாடுகளை நோக்கி சிக்கனத்திட்டம் அல்லது சேமிப்புத்திட்டம் என்ற கோதாவில், குறைவருமானம் உள்ளவர்களுக்கும் வரியை அறவிடு, விற்பனை வரியை அதிகரி, ஓய்வூதியத்தைக் குறை, என இன்னோரன்ன மக்கள் நலன் சாராத திட்டங்களை முன்வைக்கின்றன. இவற்றை மேற்கொள்ளாதுவிடின் தம்மிடமிருந்து கடன்மீட்பிற்கான உதவி கிடையாதென அச்சுறுத்துகின்றன. இவர்களின் சேமிப்புத் திட்டமெல்லாம் உபரியை மிச்சப்படுத்துவதென்றோ அல்லது ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதென்றோ அர்த்தப்படுத்தமுடியாது. மாறாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கான இன்னும் சொல்லப்போனால் வயிற்றுப்பாட்டிற்கான செலவுகளை நறுக்குவதே. மறுபுறம் மக்களின் நுகரும் சக்தி குறையும் போது, அதீத நுகர்வுக்கலாச்சாரத்திற்கு அடிமைப்படுத்தும் நோக்கில் வங்கிகள் மூலம் எளிதாகக் கடன் பெறும் வாய்ப்பையளித்து மக்களைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்தும் கடன்களில் மூழ்கச்செய்து வருகின்றன. வாழ்நாள் பூராகவும் வட்டியையும் முதலையும் கட்டுவதற்கே மாடாய் உழையென வளரும் நாட்டு அரசுகளையும், மக்களையும் நிர்ப்பந்திக்கின்றன.

குட்டையைக் குழப்பிக் குழப்பி மீன்பிடித்தே தம்மையும், தமது தூண்களான பெருநிறுவனங்களின் பொருளாதார ஆதிக்கத்தையும் தக்கவைத்துக் கொண்டு வருவதே அவர்களின் நோக்கம்.

உலகை ஏய்ப்பவர் கைகளில் அதிகாரம்!

**- ஆனந்ததேவன்**

**சொல்லிற்குப் பின்னாலுள்ள சங்கதிகள்.**

1. Achilles, மனிதனின் குதிக்காலிலுள்ள சவ்வு சம்பந்தப்பட்ட நோவுக்கான மருத்துவப்பெயர். Achilles heel என்பது, உயிர் நிலை. மிகவும் பலவீனமான பகுதி. Achilles என்பவன், Homar எழுதிய கிரேக்கக் காப்பியங்களில் ஒன்றான iliad இன் கதாநாயகன். இவன் Trojan war (கி.மு 13 அல்லது கி.மு 12) இல் தலைமைப்பாத்திரம் வகித்தவன். இறுதியில் இவன், குதிக்காலில் ஏற்பட்ட காயத்தினால் மரணமடைந்தமையால், அன்று தொட்டு இன்றுவரை அவனது பெயரே காரணப்பெயராக வழங்கப்பட்டு வருகிறது.
2. Odyssey என்பதும் Homar எழுதிய மற்றைய காப்பியங்களிலொன்று Trojan war இல், பங்குகொண்ட கிரேக்கத்தீவின் அரசனான Odysseus, நாடு திரும்புகையில் வழிதவறி மீண்ட பயணக்கதையை விபரிக்கிறது. இதன்காரணமாக, அச்சொல்லிற்கான தமிழ்க்கருத்தாக துணிகரமான நீண்ட பயணம் என்று வழங்கப்பட்டு வருகிறது.
3. Democracy என்ற பதத்தின் தோற்றுவாய் demos.Demos என்பது கிரேக்க மொழியில் மக்களைக் குறிக்கும். *

9ம் பக்கத்தொடர்ச்சி...

ஜனநாயக மறுப்பையும் ஆயுதக் கலாச்சாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றுவதற்கான முயற்சியாகவே மன்று இதனைக் கருதுகிறது.

மக்களை அரசியல் பகடைக்காய்களாக்கி அவலங்களின் மீது அரியணை ஏறும் முயற்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. இனக்குரோதத்தைத் தூண்டி, இரத்தம் தோய்ந்த வரலாற்றை மீண்டும் இந்த மண்ணில் மேடையேற்றுவதற்கான முயற்சியை மன்று எந்த வகையிலும் அனுமதிக்காது.

ஆகவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், சட்ட முறையற்ற வகையில் செய்யப்பட்ட இந்த விண்ணப்பத்தை மன்று நிராகரிப்பதுடன், ஏற்கெனவே வழங்கப்பட்ட தடைக் கட்டளையை மன்று உறுதி செய்கிறது"

இவ்வாறு நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். *

# நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத 'உதயன்' பத்திரிகையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும்!

**இ**ங்கு நீதிபதி மா.கணேசராசா அவர்கள் குறிப்பிடும் "நீதிமன்றக் கட்டளையை மதிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்" எனக் கூறியவர், முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ இயக்க முக்கியஸ்தருமான எம்.கே.சிவாஜிலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. சிவாஜிலிங்கம் இதுதான் சட்டத்தை உதாசீனம் செய்த முதல் சந்தர்ப்பம் அல்ல என்பதை, அவருடைய நடவடிக்கைகளை அவதானித்து வருபவர்கள் நன்கு அறிவர்.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை தொடர்ச்சியாக இனவாத விசம் கக்குவதையும், பொய் புரட்டுகளை எவ்வித தயக்கமுமின்றி கட்டவிழ்த்து வருவதையும், குடாநாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நன்கு அறிவர். 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளைக் கடித்த கதை'யாக, உதயன் அண்மையில் யாழ் நீதவான் மா.கணேசராசா அவர்களையும் அவதூறு செய்யும் வகையில் செய்தி ஒன்றை வெளியிட்டது.

உதயனின் இந்தச் செய்தி நீதிபதியின் கவனத்துக்குச் சென்றதையிட்டு, அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரை நீதிமன்றுக்கு அழைத்து விளக்கம் கோரியதுடன், பொய்ச் செய்திகளைப் பிரசுரித்து வருவதற்காக அப்பத்திரிகை மீதும் கண்டனம் தெரிவித்தார். ஆசிரியர் தவறை ஒப்புக்கொள்வது போல நீதிமன்றில் தலை கவிழ்ந்து நின்றுள்ளார். தவறான செய்தி வெளியிட்டதற்காக மன்னிப்பு வெளியிடும்படியும் நீதவான் தீர்ப்பு வழங்கியுள்ளார். ஆனால் உதயன் பத்திரிகை நீதிமன்ற தீர்ப்பை ஏற்று இன்றுவரை எவ்வித மன்னிப்போ வருத்தமோ தெரிவிக்கவில்லை.

உதயன் பத்திரிகை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. சரவணபவன் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கி ஏராளமான பொதுமக்களின் பணத்தை சுருட்டி, அதன் காரணமாக சிலரின் தற்கொலைக்கும் காரணமாக அமைந்த 'சப்றா பினான்ஸ்' நிதி நிறுவனத்தின் நிர்வாகியாக இருந்தவர். அப்படியான ஒருவருக்குச் சொந்தமான 'உதயன்' பத்திரிகை நீதிமன்ற உத்தரவை மதிக்கத் தயாராக இல்லை என்பதையே அப்பத்திரிகையின் செயற்பாடு எடுத்துக்காட்டுகிறது.

அதேவேளை அண்மையில் அமைச்சர் றிசாட் பதியுதீன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல்: ஒரு கண்ணோட்டம்

இலங்கையின் வட மத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபைகளுக்கு இவ்வருடம் செப்ரெம்பர் 8ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட உள்ளன. இந்த மூன்று மாகாண சபைத் தேர்தல்களைப் பொறுத்தவரையிலும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் கிழக்குத் தேர்தலே அதிக கவனத்தை ஈர்த்துள்ளது எனலாம். அதற்கொரு காரணம், புலிகள் கிழக்கிலிருந்து முற்றாக அகற்றப்பட்ட பின்னர் 2008ல் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முதன்முதலாக நடாத்தப்பட்ட போது, அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்ட முன்னாள் புலி உறுப்பினர்களின் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி 4 வருடங்கள் மாகாணசபை நிர்வாகத்தை நடாத்தியதும், அத்தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிடுவதும் ஆகும். அத்துடன் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதும் இன்னொரு காரணமாகும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் என மூவின மக்களும் கலந்து வாழும் ஒரு மாகாணமாகும். பின்வரும் விபரங்கள் கிழக்கு மாகாணம் பற்றிப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.
கிழக்கு மாகாணம் முதன்முதலாக உருவாக்கப்பட்டது 1833ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆகும்.
மாகாணத்தின் பரப்பளவு – 9996 சதுர கிலோமீட்டர்.
உள்ளடங்கும் மாவட்டங்கள் - மட்டக்களப்பு, திரிகோணமலை, அம்பாறை
மாகாணத்திலுள்ள பாராளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை – 10
மாகாணத்தின் சனத்தொகை – 15,47,306 (2012 ஆண்டுக் கணக்கெடுப்பின்படி)
மாகாண இன விகிதாசாரம்
தமிழர் – 5,90,132 (40.39 வீதம்)
முஸ்லீம்கள் - 5,49,857 (37.64 வீதம)
சிங்களவர் – 3,16,101 (21.64 வீதம்)
(இது 2007ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் அடிப்படையிலானது)
மாகாணசபை அமைக்கப்பட்டது – 1987ஆம் ஆண்டு.
மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை:37
2008 முதலாவது மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின்படி கட்சிகள் பெற்ற உறுப்பினர் தொகை :
பொதுசன ஐக்கிய முன்னணி – 20
ஐக்கிய தேசியக்கட்சி – 15
ஜே.வி.பி. – 1
தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி – 1




இந்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடும் என்ற பெரிய எதிர்பார்ப்பு இருந்த போதிலும், வேட்பாளர் பங்கீட்டில் எழுந்த முரண்பாட்டால் அக்கட்சி தனித்துப் போட்டியிடுகின்றது. இது அரசாங்கக் கட்சியின் வெற்றி வாய்ப்பை முற்றாகப் பாதிக்க வாய்ப்பு இல்லையென்ற போதிலும், ஓரளவு பாதிப்பை உண்டுபண்ணத்தான் செய்யும். அதேநேரத்தில் தேர்தல் முடிந்த பின்னர் அரசாங்கக் கட்சியும் முஸ்லீம் காங்கிரசும் இணைந்து மாகாணசபை நிர்வாகத்தை நடாத்துவதற்கான சாத்தியங்களும் உண்டு.

மறுபக்கத்தில், கடந்த மாகாணசபைத் தேர்தலைப் போன்று இம்முறையும் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடும் தற்போதைய முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, மாகாணத்திலுள்ள தமிழ் மக்களின் வாக்குகளை எவ்வளவு தூரம் கவர்ந்து இழுக்கும் என்பதும் கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. கடந்த 4 ஆண்டுகளில் அக்கட்சியின் நிர்வாகத்தில் மாகாணசபை ஓரளவு சிறப்பாகச் செயல்பட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருப்பினும், 2008 தேர்தலின்போது அக்கட்சி வெற்றி பெறுவதற்கு இருந்த சூழல் இப்பொழுதும் அப்படியே இருப்பதாகச் சொல்ல முடியாது.

2008ல் புலிகளை கிழக்கு மாகாணத்திலிருந்து முற்றாக விரட்டியடித்த பின் புதிய சூழல் ஒன்று உருவாகி இருந்தது. புலிகளின் கொடுங்கோல் பிடியிலிருந்து விடுபட்ட கிழக்கு மக்கள், ஜனநாயகச் சூழலையும், அபிவிருத்தியையும், நிம்மதியான வாழ்வையும் எதிர்பார்த்தனர். அதனால் தேர்தலில் உற்சாகத்துடன் வாக்களித்தனர். ஆனால் புலிகள் போனபின்பும, முன்னாள் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளும், கருணா – பிள்ளையான் அதிகார மோதலும் சிறிது காலம் மக்களைத் துன்பத்துக்குள்ளாக்கியது. அத்துடன் மாகாணசபை நிர்வாகத்தின் சமூகமான செயற்பாட்டுக்கு மாகாண ஆளுநர் ஊடாகச் சில வேளைகளில் மத்திய அரசாங்கம் போட்ட முட்டுக்கட்டைகளும் இடையிடையே ஏற்பட்ட வண்ணம் இருந்தன. இவையெல்லாம் அரசின்



படிப்பகம்

www.padippakam.com

மீதும், அரசுடன் சேர்ந்தியங்கிய மாகாணசபை மீதும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தின.

அத்துடன் 1987ல் மாகாணசபை உருவாக்கப்பட்ட போது தமிழர்களின் அப்போதைய பிரதான தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணி அதில் பங்கு வகிக்கவில்லை. அதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்த போதும், 2008 கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அது பங்குபற்றவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அப்போதைய சூழலில் புலிகள் கிழக்கிலிருந்து விரட்டப்பட்டாலும், வன்னியில் நிலை கொண்டிருந்ததால், அவர்களை மீறி தேர்தலில் பங்குபற்றினால் அவர்கள் கூட்டமைப்பினருக்கு தண்டனை வழங்குவார்கள் என்ற அச்சம் இருந்தது. அத்துடன் கூட்டமைப்புத் தலைமையின் முன்னோடிகள் முதலில் ஐம்பதுக்கு ஐம்பது, பின்னர் சமஸ்டி, பின்னர் தனிநாடு எனக் கோரியவர்கள் என்ற வகையில், மாகாணசபைத் தேர்தலில் - அதுவும் வடக்கும் கிழக்கும் பிரிந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதா என்ற தயக்கம் அன்று கூட்டமைப்பினருக்கு இருந்தது.

ஆனால் இப்பொழுது புலிகளும் இல்லை. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு மாகாணசபை அடிப்படையில்தான் தீர்வு என்ற நிலையும் உருவாகிவிட்டது. எனவே இனியும் தமிழ் கூட்டமைப்பு நடைமுறை அரசியலிலிருந்து விலகி நின்றால், மக்களின் தேவைகளை அவர்களால் ஈடுசெய்ய முடியாது போய், மக்கள் அவர்களை நிராகரிக்கும் நிலை ஏற்படும். அதனால்தான் இம்முறை கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பும் களமிறங்கியுள்ளது. அதன் தேர்தல் பிரவேசம் அரசாங்கம் கிழக்கில் பெறப்போகும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பாதிக்கவே செய்யும். அத்துடன் வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013 செப்ரெம்பரில்தான் நடாத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள சூழலில், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கமும் தமிழ் கூட்டமைப்பும் பெறப்போகும் தமிழ் மக்களின் வாக்குகள், வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை நாடி பிடித்துப் பார்ப்பதாகவும் அமையக்கூடும்.

கிழக்கைப் பொறுத்தவரையில், அரசாங்கக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே பெரும்பாலும் பெரும்பான்மை பலம் பெற்று மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஏனெனில் தேர்தலில் போட்டியிடும் ஏனைய இரண்டு பிரதான கட்சிகளைப் பொறுத்தவரையில், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும், முஸ்லீம் காங்கிரசுக்கு முஸ்லீம் மக்களில் ஒரு பகுதியினரும் மட்டுமே வாக்களிக்கக்கூடிய சூழலே உள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் என மூவின மக்களும் வாக்களிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக அம்பாறை மற்றும் திரிகோணமலை மாவட்டங்களில் வாழும் சிங்கள மக்களில் பெரும்பாலோர் அரசாங்க கட்சிக்கே வாக்களிக்கும் சூழல் உள்ளது. அத்துடன் அரசில் அமைச்சர்களாக உள்ள அதாவுல்லா, றிசாட் பதியுதீன், ஹிஸ்புல்லா ஆகியோருக்கு கிழக்கில் கணிசமான செல்வாக்கு உள்ளதால், அவர்களது ஆதரவாளர்களும் அரசாங்கக் கட்சிக்கே வாக்களிப்பர் என நம்பலாம். முதலமைச்சர் சந்திரகாந்தன் சிவநேசதுரை, பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோரின் தமிழ் ஆதரவாளர்களும் அரசாங்கக் கட்சிக்கே வாக்களிப்பர் என்ற போதிலும், அந்த வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக அமையுமா என்பது கேள்விக்குறியே.

அதேவேளை இந்தத் தேர்தல் சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைமையும், அதன் பிரதான கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமையும் பாரதூரமான தவறுகளை விட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான முஸ்லீம் காங்கிரசுக்கான வேட்பாளர் ஒதுக்கீட்டில், அரசாங்கத் தலைமை விட்டுக்கொடுக்காமல் இருந்து அதைத் தனிவழி போக வைத்தது மிகவும் புத்திசாலித்தனமற்ற ஒரு நடவடிக்கையாகும்.

அதேவேளை முஸ்லீம் காங்கிரஸ் தனிவழி போகத் தீர்மானித்த பின்னர், அதற்கு என அரசு ஒதுக்கிய 11 வேட்பாளர் தொகையை அரசின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்காவது கொடுத்திருக்க வேண்டும். குறிப்பாக அரசில் அங்கம் வகிக்கும் சோசலிசக் கூட்டமைப்புக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பனவற்றுக்கு ஒரு வேட்பாளர் இடமாவது ஒதுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக அக்கட்சிகளின் தலைவர்களும் அமைச்சர்களுமான டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கூட்டாக தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அத்துடன் அக்கட்சிகள் காலம்சென்ற விஜயகுமாரதுங்க ஸ்தாபித்த சிறீலங்கா மக்கள் கட்சியின் விளக்கு சின்னத்தில் இத்தேர்தலில் தனியாகப் போட்டியிடுகின்றன.

அதேபோல, அரசாங்கத்தின் இன்னொரு பங்காளிக் கட்சியான அமைச்சர் விமல்



படிப்பகம்

www.padippakam.com

வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணிக்கும் வாய்ப்புக் கொடுக்காததால், அவரது கட்சி திரிகோணமலை மாவட்டத்தில் தனியாக வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

இந்த வகையான தவறு சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலிலும் நடந்துள்ளது. அங்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும், முன்பு அரசின் பங்காளிக் கட்சியாக இருந்த மலையக மக்கள் முன்னணியையும், ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் மக்களுக்கான தரகரான மனோ கணேசன் வளைத்துப் பிடிப்பதற்கு அரச தலைமை வாய்ப்புக் கொடுத்துள்ளது.

அரச தலைமையின் இத்தகைய செயற்பாடுகள், எதிர்காலத்தில் அதன் ஸ்திரத்தன்மைக்கும் தேர்தல் வெற்றிகளுக்கும் பெரும் பாதிப்பாக அமையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதன் முன்னெச்சரிக்கையாக கிழக்கு மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தல்கள் அமைந்தாலும் வியப்பதற்கில்லை.

*

11ம் பக்கத்தொடர்ச்சி...

மன்னார் நீதிபதியை மிரட்டியதாக வந்த குற்றச்சாட்டு சம்பந்தமாக உதயன் பத்திரிகை உரத்த குரலில் பிரச்சாரம் செய்து வருகிறது. குற்றம் யார் இழைத்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அமைச்சர் இழைத்ததாகச் சொல்லப்படும் குற்றம் பற்றி வாய் கிழிய கூச்சல் போடும் உதயன் பத்திரிகை, தான் நீதிமன்ற உத்தரவை மதிக்காதது பற்றி வாய் திறக்க மறுக்கிறது. இதுதான் அவர்கள் நீதித்துறையை மதிக்கும் இலட்சணமும், பத்திரிகா தர்மத்தை மதித்து ஒழுகும் பண்பாடும் போலும்!

மற்றவர்கள் செய்யும் தவறுகளை விமர்சிப்பதற்கு முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய பாராளுமன்ற உறுப்பினரும், முன்னைய பாராளுமன்ற உறுப்பினரும் தாம் மட்டும் செய்வது சரியானதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதைவிடுத்து 'ஊருக்கு உபதேசம் உனக்கல்ல' என்றவாறு நடந்து கொள்ளக்கூடாது.

*

# வடக்கில் ஐந்து பாரிய கைத்தொழில் பேட்டைகள்!

அரசாங்கம் வெகுவிரைவில் வடக்கில் 5 பாரிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கத் தீர்மானித்துள்ளது. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு வடக்கின் பங்களிப்பைப் பெறுவதுடன், யுத்தம் காரணமாக கடந்த மூன்று தசாப்தங்களாக வேலை வாய்ப்பு இல்லாமல் வறுமையில் வாடும் வடபகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் ஒரு வருட காலத்தில் இந்தக் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும் என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து மேலும் பல கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கைத்தொழில் பேட்டைகளில் அரசாங்கமும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களும் தனியாகவும் கூட்டாகவும் முதலீடுகளைச் செய்ய முடியும் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். யுத்தம் காரணமாக நீண்டகாலம் இயங்காது இருந்து, தற்பொழுது மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இதுவரை 52 நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

*

“பொருளாதார அடியாட்கள் என்று அழைக்கப்படுபவர்கள் பல்லாயிரம் கோடி டொலர்கள் மதிப்புள்ள மோசடிகளில் ஈடுபட்டு வருபவர்கள். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டையும் கொள்ளையிட்டு வருபவர்கள். இந்த கொள்ளையடிக்கும் பணிக்காக அவர்களுக்கு பெரும் பணம் ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் பொருளாதார நிபுணர்கள். உலக வங்கி, சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாட்டு நிறுவனம் மற்றும் இவற்றை போன்ற பன்னாட்டு நிதி உதவி அமைப்புகளில் குவிந்திருக்கும் பணத்தை மாபெரும் பன்னாட்டு நிறுவனங்களின் பணப்பெட்டிகளுக்கும் இப்பூமியின் இயற்கை வளங்களை தங்கள் பிடியில் வைத்திருக்கும் சில பணம் படைத்த குடும்பங்களின் சட்டை பைகளில் கொண்டு சேர்ப்பதுதான் வேலை. மோசடியான நிதி அறிக்கைகள், தேர்தல் முறைகேடுகள், இலஞ்சம், மிரட்டி பணம் பறிப்பது, பாலியல், கொலை முதலியன இவர்கள் கருவிகள் ஆகும். பேரரசுகள் எவ்வளவு பழமையானதோ அதேயளவிற்கு இவர்களது தந்திரங்களும் பழமையானதுதான். ஆனால் உலகமயமாக்கல் முழுவீச்சில் நடைபெற்று வரும் இன்றைய உலகில் பொருளாதார அடியாட்களின் தந்திரங்கள் புதிய, பயங்கரமான பரிணாமங்களை எட்டியுள்ளன.”

“நானும் ஒரு பொருளாதார அடியாளாக இருந்தவன்தான்.”

**- ஜான் பெர்கின்ஸ்** நூல்: “ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்”



படிப்பகம்

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி...

தமது பாரம்பரிய வாழ்விடங்களில் மீளக் குடியேறுவதை தற்போதைய சூழலிலும் விரும்பாதவர்களாகவே இருக்கின்றனர். மன்னாரில் அண்மைக்காலமாக தமிழ் – முஸ்லீம் மக்களிடையே உருவாக்கப்பட்டு வரும் முறுகல் நிலைக்கு இந்தப் பின்னணியையும் கவனத்தில் கொள்வது அவசியமானது.

அதேநேரத்தில், மன்னார் நீதிபதி உண்மையில் அச்சுறுத்தப்பட்டிருந்தால், அச்சுறுத்தியவர் எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும், எவ்வளவு அரசியல் செல்வாக்கு உள்ளவராக இருந்தாலும் அவர் மீது சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவது மிகவும் அவசியம். ஏனெனில் ஒரு நாட்டில் நீதித்துறை அச்சுறுத்தலுக்குள்ளானால், சட்டம் ஒழுங்கு சீர்குலைவது தவிர்க்கவியலாது போய்விடும். அதன் காரணமாக அராஜக நிலை தோன்றும். தீய சக்திகளும் சமூக விரோதிகளும் தன்னிச்சையாக செயல்படத் தொடங்குவார்கள். இந்த நிலை எக்காரணம் கொண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகும்.

மன்னார் சம்பவம் அமைச்சர் றிசாட் பதியுதீன் சம்பந்தப்பட்டது என்றபடியால், அரசுக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் துள்ளித் குதிப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால் ஏற்கெனவே நீதிமன்ற அவமதிப்பை மேற்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரு முக்கியஸ்தர்கள் பற்றி எவருமே வாய் திறப்பதாகக் காணோம். அத்துடன் அரசியல் நோக்கத்துடன் அமைச்சருக்கு எதிராக நடாத்தப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் சூறாவளியில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பிரச்சினை காணாமல் போகும் நிலை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாண நீதிமன்றம் வழங்கிய ஓர் ஆணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பகிரங்க இடத்தில் வைத்து கிழித்து எறிந்ததுடன், “நீதிமன்றக் கட்டளையை மதிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்” எனவும் சவால் விடுத்துள்ளார். அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான ‘உதயன்’ பத்திரிகை வெளியிட்ட தவறான செய்தி ஒன்று பற்றி மறுப்பு வெளியிடும்படி யாழ்.நீதிமன்று நீதவான் மா.கணேசராசா விடுத்த உத்தரவை மதிக்காமல் இன்றுவரை அப்பத்திரிகை அதைப் பிரசுரிக்காமல் இருந்து வருகிறது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் கூட நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட சவால்கள்தான்.

எனவே அரசாங்கம் இந்த மாதிரியான நீதித்துறை அவமதிப்புகளுக்கு எதிராக பாரபட்சம் அற்ற ரீதியில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லாவிடின் மக்கள் நீதித்துறையின் மீதும், அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்து விடுவர். அப்படியான ஒரு நிலைமை உருவானால், அது ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கால இருண்ட யுகத்துக்கு (1977 – 1994) நாட்டை இட்டுச் சென்றதாக அமைந்துவிடும்.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் ஐ.தே.க காடையர்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வீடுகளுக்கு கல்வீசித் தாக்கினார்கள். அதுமாத்திரமின்றி, அரச உயர் தலைமையே நீதிபதிகளை நிர்ப்பந்தித்துப் பதவி விலக வைத்துவிட்டு, தமக்கு வேண்டியவர்களைப் பதவியில் அமர்த்தியது. அவ்வாறானதொரு நிலைமையை, சாதாரண பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இன்றைய அரசு அனுமதிக்கவே கூடாது.

விரைவில் மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெற இருக்கும் சூழலில், மன்னார் சம்பவத்தை வைத்து இந்த மாகாணங்களில் வாழும் கணிசமான தமிழ் – முஸ்லீம் மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை உருவாக்கி அரசியல் லாபம் பெற முயலும் சந்தர்ப்பவாத சக்திகள் குறித்தும் அரசு மட்டுமின்றி, பொதுமக்களும் எச்சரிக்கையாக இருப்பதும் அவசியமாகும். *

## உப்பைக் குறைத்தால் வயிற்று புற்றுநோயை தடுக்கலாம்!

உணவு வகைகளில் உப்பை குறைத்தால் வயிற்று புற்றுநோயை தடுக்கலாம் என ஆய்வில் தெரியவந்துள்ளது. வேர்ல்ட் கான்ஸர் ரிசர்ச் ஃபண்டின் (டபிள்யூ.சி.ஆர்.எஃப்) அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உப்பு நிறைய கலந்த உணவுகள் வயிற்று புற்றுநோய்க்கு காரணமாவதுடன், இரத்த அழுத்தம், இதயநோய் ஆகியவற்றை தோற்றுவிப்பதாக ஆய்வறிக்கை கூறுகிறது. உப்பின் உபயோகம் தினமும் 6 கிராமுக்கு அதிகமாகாமல் பார்த்துக்கொள்வது ஆரோக்கியத்திற்கு நல்லது என்று ஆய்வறிக்கை கூறுகிறது. பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும் வயிற்றில் புற்றுநோய் பாதித்து 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்கின்றனர். இவர்களில் 15 சதவீதம் பேராவது உப்பை கட்டுப்படுத்தியிருந்தால் புற்றுநோய் வராமல் தடுத்திருக்கலாம் என டபிள்யூ.சி.ஆர்.எஃப் கூறுகிறது.

உப்பின் அளவை உணவுப் பொருட்களின் கவரில் குறிப்பிட வேண்டும் என கூறுவது இதன் அடிப்படையிலாகும் என கான்ஸர் ரிசர்ச் சென்டர் உறுப்பினர் லூஸி போய்ட் கூறுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# 1983 ஜூலை வன்செயலின் 29வது ஆண்டு நினைவாக....

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கொடுங்கோல் ஆட்சியின் (1977 – 1994) போது இலங்கையில் தமிழர்கள் மீது 1977, 1981, 1983 என மூன்று தடவைகள் அரச ஆதரவுடன் இன வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. குறிப்பாக 83 ஜுலை வன்செயலின் போது, நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஐ.தே.க காடையர்களால் கொல்லப்பட்டதுடன், பல தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கும் உள்ளாக்கப்பட்டு, தமிழர்களின் சொத்துகளும் சூறையாடப்பட்டன.

மறுபக்கத்தில் இந்த ஜுலை வன்செயல் கொடுமைக்கு கால்கோள் இட்டவர்கள் விடுதலைப் புலிகள். அவர்கள் 83 ஜுலை 23 ம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் ட்ரக் வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்களை மறைந்திருந்து தாக்கி, அவர்களில் 13 பேரைக் கொலை செய்ததின் மூலம் இந்த வன்செயலுக்கு அடி கோலினார்கள். அதன் விளைவாக ஐ.தே.க அரசு தமிழர்களுக்கு எதிராக நடாத்திய ஜுலை வன்செயலின் ஒரு அங்கமாக, நாகரீக உலகு வெட்கித் தலை குனியும் அளவுக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளின் குரூரப் படுகொலையும் அரங்கேற்றப்பட்டது.

இந்தப் பின்னணியில் தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 30 வருடங்கள் தொடர்ந்து நடந்து தமிழ் மக்களுக்கு மேலும் சொல்லொணா இழப்புகளை ஏற்படுத்திச் சென்றுள்ளது. இந்த கொடூர யுத்தத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், சொத்துகளும் அழிக்கப்பட்டு, பல இலட்சம் பேர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தமும் உருவானது. அந்த இழப்புகளுக்குக் காரணகர்த்தாக்களான இருதரப்பில் ஒரு தரப்பான புலிகள் 2009 மே மாதத்துடன் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மறுதரப்பான சிங்களப் பேரினவாத சக்திகள் இன்னமும் பல்வேறு அரங்குகளில் தமது தலையை உயர்த்திய வண்ணம் உள்ளனர். அதில் வெட்கக் கேடானதும், மிகவும் ஆத்திரமூட்டக்கூடியதுமான விடயமென்னவெனில், எந்த ஐ.தே.க தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்து வைத்ததோ, அதே ஐ.தே.கவுடன் தமிழர்களின் தலைமை எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று கூடிக்குலாவப் புறப்பட்டிருப்பதுதான்.

1983 ஜுலை இன வன்செயலை நினைவுகூரும் இவ்வேளையில், அந்த வன்யெலிலும், அதன் பின்னரான போரிலும் தமது இன்னுயிர்களை அநியாயமாக இழந்த அத்தனை மக்களுக்கும் 'வானவில்' தனது நினைவஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறது. அத்துடன் இன, மத பேதமற்ற ஒரு புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் கரம் கோர்க்க வேண்டுமெனவும் அது வேண்டிக் கொள்கிறது. *

# இந்திய – இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி 25 வருடங்கள்

இலங்கையில் தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக எதிர்கொண்ட பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி 25 ஆண்டுகள் ஆகிவிட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் இலங்கைத் தரப்பில் அதற்கு பெரும் தடைகளை ஏற்படுத்தினர் என்பதை மறுக்க முடியாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம் ஜீ ஆர் அவர்கள் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் காலமனதை அடுத்து தமிழகத்திலும், புதுடில்லியிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்தியத் தரப்பால், அந்த ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்த, இலங்கை மீது போதிய அழுத்தங்களை கொடுக்க முடியவில்லை என்று பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார், இந்திய அமைதி காக்கும் படையின் புலனாய்வு பிரிவுக்கு தலைவராக இருந்த கேர்ணல் ஹரிஹரன்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக இலங்கையில் மாகாண சபைகளை உருவாக்கும் வகையில் அரசியல் சாசனத்தில் 13 ஆவது சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதை தவிர பெரும்பாலும் அந்த ஒப்பந்தம் தோல்வியே அடைந்துவிட்டதாகவும், இந்தியா புலிகளை சுலபமாக வழிக்கு கொண்டுவந்து விடமுடியும் எனத் தவறாக கருதியதே, அந்த ஒப்பந்தம் செயலிழந்து போனதற்கு ஒரு முக்கிய காரணம் என ஹரிஹரன் பிபிசி தமிழோசையிடம் மேலும் கூறினார்.

இந்தியாவின் அரசியல் தலைமை மிகவும் குழப்ப நிலையில் இருப்பதாகவும், ஆனால் இலங்கையின் ஜனாதிபதி ராஜபக்ச மிகவும் சக்திவாய்ந்த தலைவராக இருப்பதாகவும் ஹரிஹரன் குறிப்பிட்டார். *



படிப்பகம்